தினமலர்

சென்னை : தமிழகத்தில் கரும்பு விலை நிர்ணயம் பற்றிய புகாருக்கு, முதல்வர் கருணாநிதி விளக்கம் அளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள கேள்வி - பதில் அறிக்கை:

*** ஒரு டன் கரும்பு 2,000 ரூபாய் என கோரிக்கை வைத்ததாகவும், ஆனால், தமிழக அரசு 1,437 மட்டுமே நிர்ணயித்திருப்பதாகவும் மார்க்சிஸ்ட் வரதராஜன் கூறியிருப்பது பற்றி?**

இந்த ஆண்டு அரவைப் பருவத்துக்கு 9.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு குறைந்தபட்ச சட்டப்பூர்வ விலையாக 1,077.60 ரூபாய் என, மத்திய அரசு நிர்ணயித்தது. கரும்பு விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு, மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலையை விட 359.80 ரூபாய் உயர்த்தி, 9.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக 1,437.40 ரூபாய் என நிர்ணயித்தது. கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவீத சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்புக்கு 11.30 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், ஒரு டன்னுக்கு வாகன வாடகை 90 ரூபாய் மற்றும் கூடுதல் கட்டுமானம் அடிப்படையில் அளிக்கப்படும் சராசரி ஊக்கத் தொகை 22.60 ரூபாயைச் சேர்த்து, தற்போது 1,550 ரூபாய் கிடைக்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2001ம் ஆண்டு அ.தி.மு.க., ஆட்சி அமைந்தபோது, அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, "மத்திய அரசின் குறைந்தபட்ச விலை மட்டும் தரப்படும்; மாநில அரசின் பரிந்துரை விலையை வழங்க மாட்டோம்' என, தீர்மானம் நிறைவேற்றினார் ஜெயலலிதா. நான்காண்டு காலம் அவ்வாறே வழங்கப்பட்டது. மாநில அரசு கூடுதலாக பரிந்துரை வழங்கலாம் என, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கிய பிறகும் 16 மாதம் சும்மா இருந்துவிட்டு, 2006ம் ஆண்டு சட்டசபை தேர்தல் வருவதை முன்னிட்டு, ஒரு டன் கரும்புக்கு 1,014 ரூபாய் என ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டதே தவிர, அந்தத் தொகை வழங்கப்படவில்லை. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 440 கோடி ரூபாய் என்பதை வரதராஜன் வசதியாக மறந்துவிட்டு, இடைத்தேர்தலில் அந்த ஜெயலலிதா கட்சியின் வேட்பாளருக்காக தனியாக மேடை போட்டு பிரசாரம் செய்ததை மறக்க முடியவில்லை.

*** தமிழகத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலை, இதர மாநிலங்களை விட குறைவானதா?**

மகாராஷ்டிரா, ஆந்திராவில், தமிழகத்தை விட அதிக விலை தருவதாக வரதராஜன் தெரிவித்திருக்கிறார். அதிக கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, குஜராத் போன்ற மாநிலங்களில், மாநில அரசின் சார்பாக எந்தப் பரிந்துரை தொகையும் நிர்ணயம் செய்வதில்லை என்பது தான் உண்மை.

*** மானிய உதவி கிடைக்கும் வரை உற்பத்தி நிறுத்தப் போராட்டம் தொடரும் என, சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதே!**

"ஐகோர்ட் விதித்த அபராதத் தொகை அனைத்தையும் செலுத்தி, 2010 ஜனவரி 6ம் தேதிக்குள் முழுமையாக சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, ஒரு சொட்டு கழிவு நீர் கூட வெளியேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது. தமிழக அரசு சார்பில் எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகளின் பலனாக, இதுவரை பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க, சாயப்பட்டறை உரிமையாளர்கள் செலுத்திய வட்டித் தொகையான 100 கோடி ரூபாயை, வங்கிக் கடனுக்கு ஈடாக சரி செய்துகொள்ள மத்திய அரசு முன்வந்துள்ளது. தமிழக அரசின் சார்பில், துணை முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அமைச்சர்கள், துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், திருப்பூர் சாயப்பட்டறை உரிமையாளர்களுடன் பேசியிருக்கின்றனர். தமிழக அரசும், தனது பங்காக 120 கோடி ரூபாய் மானியம் வழங்க முன்வந்துள்ளது. இவ்வளவுக்குப் பிறகும் சாயப் பட்டறை உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது வருத்தம் அளிக்கக் கூடியது. எனினும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும்போது, சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய தமிழக அரசு தயாராக உள்ளது. இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

**ஏலக்காய் விலை கிலோ ரூ.1,511 17 : ஆண்டு சாதனை முறியடிப்பு**

ஜனவரி 05,2010,06:24



தேவாரம்: வரலாற்றிலேயே அதிகபட்ச விலையாக ஒரு கிலோ 1,511 ரூபாய்க்கு ஏலக்காய் விற்பனையானது. 17 ஆண்டு கால சாதனை விலையான 1,225 ரூபாய் தகர்க்கப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டத்தில், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஏலக்காய் சாகுபடி நடக்கிறது. இங்கு விளையும் ஏலக்காய், வண்டன்மேட்டில் உள்ள எஸ்.ஐ.ஜி.சி., - கே.சி.பி.எம்.சி., - சி.பி.எம்.சி., - ஹெட்டர், போடியில் உள்ள சி.பி.ஏ., - எஸ்.டி.சி.எல்., - ஐ.சி.எம்.சி., உட்பட, எட்டு ஈ-ஆக்ஷன் சென்டர்கள் மூலம், ஏலம் விடப்படுகிறது. கடந்த 1992ல், 8 எம்.எம்., கிரீன் கோல்டு ரகம் ஏலக்காய் ஒரு கிலோ 1,225 ரூபாய்க்கு விற்பனையானது. 17 ஆண்டுகள் சாதனையாக கருதப்பட்ட இந்த விலை, கடந்த வாரம் வெள்ளியன்று வண்டன்மேடு மாஸ் ஆக்ஷன் சென்டரில் தகர்க்கப்பட்டு, ஒரு கிலோ 1,511 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வடமாநிலங்களுக்கு ஏலக்காய் அனுப்பும் மொத்த வியாபாரி கல்யாணக்குமார் கூறியதாவது: அரபு நாடுகளில் ஏலக்காய்க்கு நல்ல டிமாண்ட் உள்ளது. இடுக்கி ஹைரேஞ்ச் பகுதியில், நான்காவது ஏலப்பழம் எடுக்கும் சீசன் நடக்கிறது. கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாரத்தில், வரத்து குறைந்து, தற்போது எடுப்புமும்முரமாக உள்ளதால், சீராக உள்ளது. கடந்த வாரத்தில் ஆக்ஷன் சென்டர்களில், ஒரு லட்சத்து 75 ஆயிரம் கிலோ விற்பனையானது. நடப்பு வாரத்தில்

இரண்டு லட்சத்து 25 ஆயிரம் கிலோ பதிவு செய்யப்பட்டுள்ளது. உள் நாட்டில் நுகர்வு அதிகரித்ததும், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி ஆர்டர் கணிசமாக உள்ளதாலும், விலை ஏறுமுகமாக உள்ளது. இவ்வாறு, கல்யாணக்குமார் கூறினார். கடந்த வாரம், ஒரு கிலோ 950 முதல் 980 ரூபாய் வரை விற்பனையான, 'பல்க் ஆவரேஜ்' ரகம், நடப்பு வாரத்தில், 1,020 முதல் 1,040 ரூபாய் வரை விற்கப்பட்டது. வரத்து கணிசமாக உள்ள நிலையில், விலை எப்போதுமில்லாத உச்சத்தை தொட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கறிக்கோழி விலை சரியும் அபாயம் : பண்ணையாளர்கள் கவலை**

ஜனவரி 05,2010,06:22



நாமக்கல்: ஆந்திராவில் நிலவி வரும் அசாதாரண சூழல் காரணமாக, கறிக்கோழி விலையில் சரிவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இது, பல்லடம் பகுதி பண்ணையாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்டம், முட்டை உற்பத்தியில் தன்னிகரற்று விளங்குவது போல், கோவை மாவட்டம் பல்லடம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் கறிக்கோழி பண்ணைகள் அதிகளவில் உள்ளன. பல்லடத்தில் மட்டும், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் உள்ளன. பண்ணைகளில், ஆறு வாரம் வரை வளர்க்கப்படும் கறிக்கோழிகள், இறைச்சிக்காக விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகளில் 50 சதவீதம், கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. கேரளா மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இதன்மூலம், ஒரு கோடி ரூபாய் வரை, நாள்தோறும் வர்த்தகம் நடக்கிறது. சில மாதங்களுக்கு முன், கேரளா செக்போஸ்ட்டில், வரி செலுத்துவது தொடர்பாக எழுந்த பிரச்னையால், கறிக்கோழிகளை அங்கு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட தேக்கம் காரணமாக, கறிக்கோழிகளின் விலை சரிய துவங்கியது. இதனால், கறிக்கோழி பண்ணையாளர்கள் கவலையடைந்தனர். இந்த நிலை சீரடையத் துவங்கியதையடுத்து, கறிக்கோழி விலை, படிப்படியாக ஏற்றம் காணத் துவங்கியது. தற்போது, கறிக்கோழி கிலோ 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது, பண்ணையாளர்களுக்கு லாபம் ஈட்டித்தரும் வகையில் அமைந்தது. இந்நிலையில், ஆந்திராவில், தனி மாநில கோரிக்கை பிரச்னை காரணமாக, அசாதாரண சூழல் நிலவுகிறது. இதனால், அம்மாநிலத்துக்கு வாகனப் போக்குவரத்து முற்றிலும் தடைபட்டு, கறிக்கோழி அனுப்புவதில் சிக்கல் உருவாகியுள்ளது. பல்லடத்தில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளதால், கறிக்கோழி விலையில் சரிவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இது, பண்ணையாளர்கள்

மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. கறிக்கோழி விற்பனையாளர் ஒருவர் கூறுகையில், 'ஆந்திராவில் நிலைமை சீரடைந்தால் மட்டுமே, கறிக்கோழி விலையேற்றம் அடையும்' என்றார்

தினமணி

## வேளாண் பொருளாதார அமைப்பு தலைவராக முன்னாள் துணைவேந்தர் நியமனம்

First Published : 05 Jan 2010 07:55:24 AM IST
Last Updated : 05 Jan 2010 09:21:23 AM IST

கோவை, ஜன.4:அகில இந்திய வேளாண் பொருளாதார அமைப்பின் தலைவராக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சி.ராமசாமி (படம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

அமிர்தசரஸில் உள்ள குருநானக் தேவ் பல்கலை.யில் அண்மையில் நடைபெற்ற வேளாண் பொருளாதார அமைப்பின் வருடாந்திரக் கூட்டத்தில் அவர் தேர்வு செய்யப்பட்டார். 3 ஆண்டுகள் இப் பதவியில் இருப்பார்.
வேளாண் பொருளியல் கல்வி மற்றும் கிராமப்புற வளர்ச்சி குறித்த ஆராய்ச்சிகளை ஊக்குவித்து வருகிறது. சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், புத்தகங்களுக்குப் பரிசுகளை அளிக்கிறது.

சர்வதேச வேளாண் பொருளியல் அமைப்பின் முக்கிய அங்கமாக இவ்வமைப்பு உள்ளது. பிரதமர் மன்மோகன் சிங், பொருளாதார நிபுணர்கள் மான்டேக் சிங் அலுவாலியா, சி.ரங்கராஜன் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். மத்திய திட்டக் குழு, நபார்டு வங்கி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியன இந்த அமைப்புக்கு நிதியுதவி அளிக்கின்றன.